த. நா.ச.பே. எண் : 011 நாள் : 01.04.2015

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் இன்று (1.4.2015) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், 2015–2016ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்திற்கு பதிலளித்து ஆற்றிய உரை:–**

மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே !

விஞ்ஞான அற்புதங்கள்
பூமியை சொர்க்கம்
ஆக்குகின்றன...

ஆன்மீக அற்புதங்கள்
மனிதர்களின் அகவாழ்வை
அழகாக்குகின்றன...

அரசியல் அற்புதங்கள்
மானுடத்தின் புறவாழ்வை
புதுப்பிக்கின்றன...

இம்மூன்று
அற்புதங்களின்
சிருஷ்டி கர்த்தாக்களையே

சிறந்த உயிர்களாக
புகழ் செறிந்த பெயர்களாக
உலகமே
போற்றிப் புகழ்கிறது,
புகழ்மாலை சூட்டுகிறது...

அவ்வகையில்,
தம் பேரறிவுத் திறத்தால்
பீடுநடை மறத்தால்

அயராத உழைப்பால்
அர்ப்பணிப்பு குணத்தால்
சூழ வரும் பகைகளை
சுக்கு நூறாக்கும் வீரத்தால்
எதிர்வரும் எதிர்ப்புகளையே
ஏணிகளாக்கும் விவேகத்தால்

மக்கள் சக்தி பலத்தால்
மதிநுட்ப வளத்தால்

திராவிட அரசியலை
தன்னைச்சுற்றியே
சுழல வைக்கும்
எங்கள் அம்மா எனும்
மூன்றெழுத்து மந்திரமே...

தாய் ஆளும் காலமே
தமிழகத்தின் பொற்காலம்,
எங்கள்
தாய் வாழும் காலமே
தமிழினத்திற்கே நற்காலம்,
என்பதை

காலக் கல்வெட்டாய்
செதுக்கிய
கம்பீரச் சித்திரமே...

பனிரெண்டாம் நூற்றாண்டில்
பெண் இனப் போராளியாய்
படை நடத்தி பகை முடித்த
டெபோரா..

பதினேழாம் நூற்றாண்டில்
பிரஞ்சு தேசத்தில்
பீரிட்டு எழுந்திட்ட
ஜோன் ஆஃப் ஆர்க்...

இந்தியத்தின் வீரத்தை
இமயத்தின் உச்சத்தில் நிறுத்தி
இவ்வையகத்தையே
வியந்து பார்க்க வைத்த
ஜான்சி ராணி...

இழந்த மண்ணை மீட்க
இடையறாது போராடி

உலகத்தில் முதன் முதலாய்

உமையாள் படையென்னும்
பெண் ராணுவத்தை நிறுவி

குயிலி என்னும் வீரத் திருமகளால்
மண்ணுலகமே அதுவரை காணாத
மனித வெடிகுண்டுத் தாக்குதலும் நடத்தி
கும்பினியர் கூட்டத்தை
குலைநடுங்க வைத்த
வீரத்தமிழச்சி வேலுநாச்சி...

என்னும்
அற்புத அவதாரங்களின்
ஓர் உருவாக
அன்னைத்தமிழ் மண்ணில் அவதரித்த
21–ஆம் நூற்றாண்டின்
இரும்புத் தலைவியாம்

நான்  வணங்கும் தாயுருவ தெய்வம்
மக்களின் முதல்வர்
இதயதெய்வம் புரட்சித்தலைவி
மாண்புமிகு அம்மா அவர்கள்
இருக்கும் திசைநோக்கி
தலைவணக்கம்
எனது முதல் வணக்கம் செலுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழகத்தின் தன்னிகரில்லாத் தலைவர், மக்களின் முதல்வர் இதயதெய்வம் புரட்சித்தலைவி மாண்புமிகு **அம்மா** அவர்கள், கடந்த 2011 ஆம் ஆண்டு, மே மாதம் தமிழகத்தின் முதலமைச்சராக, மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற பின்பு, இந்த அரசின் சார்பாக நான்கு நிதி நிலை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டு, ஐந்தாவது நிதிநிலை அறிக்கை, கடந்த 25.03.2015 அன்று, இப்பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டது.

2010-11 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின் மொத்த மதிப்பீட்டளவு, 94,218.19 கோடி ரூபாய் ஆகும். இது, கடந்த நான்கு ஆண்டுகளில் படிப்படியாக உயர்த்தப்பட்டு, 2015-2016 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மதிப்பீடு 1,84,296.01 கோடி ரூபாய் என்ற அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது.

இதே போல் மாநிலத்தின் மொத்த வருவாய் வரவுகள் 2010-2011ல் 70,187.63 கோடி ரூபாய் ஆக மட்டுமே இருந்தது. இது, 2015-2016 ஆம் ஆண்டிற்கு 1,42,681.33 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

இந்த நிதிநிலை அறிக்கையில் தெரிவித்தபடி, மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் அதே நேரத்தில், ஏழை எளிய மக்களைப் பாதுகாக்கும் நலத் திட்டங்களையும் சிறப்பாக செயல்படுத்தும் ஒரு மக்கள் நல அரசாக, மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்த அரசு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில்தான், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பின்பற்றிவரும் மும்முனை முன்முயற்சிகளான விவசாயம், தொழில் போன்ற துறைகளை ஊக்குவித்தும் கட்டமைப்பை மேம்படுத்தியும் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவது, மனித வளம் சார்ந்த கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளின் செயல்பாடுகளை மேம்படுத்தி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது, எண்ணற்ற நலத் திட்டங்கள் மூலம் ஏழை எளிய மக்களின்

வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பது என மூன்று முறைகளிலும் செயல்பாடுகளை முடுக்கிவிட்டு, அனைவருக்கும் நலம் பயக்கும் ஒரு சமச்சீர் வளர்ச்சியை ஏற்படுத்தக்கூடிய வகையில், இந்த வரவு—செலவுத் திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

எத்தகையதொரு மந்தமான பொருளாதாரச் சூழ்நிலையில், பெரும் நிதி நெருக்கடிகளுக்கு இடையே, வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டு தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும், பொதுமக்களின் நலனுக்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி இயங்கும் இந்த அரசு செயல்பட்டு வருகிறது என்பதை இந்த நிதிநிலை அறிக்கையின் மூலம் தெளிவுபடுத்தியுள்ளோம். இத்தகைய கடும் நிதிச் சூழ்நிலையை எடுத்துரைக்கும் போது, உண்மை நிலையை வெளிப்படையாகக் கூற வேண்டிய அவசியம் கருதி சில விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

பதினான்காவது நிதி ஆணையம் எவ்வாறு சில அளவுகோல்களை மாற்றியும் தேவையற்ற புதிய அளவுகளை புகுத்தியும், தமிழ்நாடு போன்ற சிறப்பாக செயல்படும் மாநிலங்களுக்கு, கணிசமாக நிதிப்பகிர்வு குறையும் வகையில் ஒரு புதிய முறையை வகுத்துள்ளது என்பதைத் தெரிவித்து, அதிலுள்ள குறைகள் என்ன என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளோம். இத்தகைய மாறுதல்களால் எந்த அளவிற்கு மத்திய அரசிடமிருந்து நமக்குக் கிடைக்கும் நிதி குறையும் என்பதையும் நாம் எடுத்துரைத்துள்ளோம். மத்திய அரசின் பகிர்வு முறையில் (Vertical devolution) மாநிலங்களுக்கு கிடைக்கும் நிதியை, 32 சதவீதத்திலிருந்து 42 சதவீதமாக உயர்த்தியுள்ளதைப் நாம் பாராட்டியுள்ளோம். ஆனால், இவ்வாறு நிதிப்பகிர்வு உயர்த்தப்பட்டுள்ள நிலையில், மாநிலங்களுக்கு வழங்கப்படும் மானியங்களின் அளவை மத்திய அரசு கணிசமாகக் குறைத்துள்ளதை சுட்டிக்காட்டி, இம்மாற்றங்களால் கூடுதல் நிதி ஆதாரங்கள் மாநிலங்களுக்கு கிடைக்க வாய்ப்பு இல்லை என்பதை நாம் குறிப்பிட்டுள்ளோம். அதே வேளையில், மாநிலங்களுக்கிடையே நிதிப் பகிர்வு

முறையில் (Horizontal devolution) தமிழகத்திற்கு நிதி ஒதுக்கீடு குறைக்கப்பட்டுள்ளதால் எவ்வாறு நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது என்பதையும் நாம் தெரிவித்துள்ளோம்.

மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையில் வழங்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் நிறுத்தப்பட்ட சில திட்டங்களையும், நிதி குறைக்கப்பட்ட சில திட்டங்களையும் குறிப்பிட்டுள்ளோம். இவை மத்திய அரசைக் குறைசொல்லும் நோக்கத்துடன் அல்ல என்பதையும், இந்த மாற்றங்கள் பதினான்காவது நிதி ஆணையத்தின் பரிந்துரை அடிப்படையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் என்பதால் அதனால் தமிழகம் எவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளது என்பதையும் தெளிவுபடுத்தும் நோக்கத்தோடுதான் இவை விரிவாக எடுத்துரைக்கப்பட்டன. அதேசமயத்தில், தமிழ்நாடு போன்ற மாநிலங்களுக்குக் கிடைக்கும் நிதி குறைந்துள்ளதால் மத்திய அரசின் நிதி ஆயோக் (NITI Aayog) அமைப்பிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 20,000 கோடி ரூபாயிலிருந்து இது ஓரளவிற்கு ஈடுசெய்யப்படவேண்டும் என்ற கோரிக்கையும் வைக்கப்பட்டுள்ளது. பல இனங்களில் மத்திய அரசு ஊக்கத்தொகை விடுவித்துள்ளதற்கும், பாரம்பரிய நகரங்கள் மேம்பாட்டு திட்டத்தில் வேளாங்கண்ணி, காஞ்சிபுரம் ஆகிய நகரங்களை சேர்த்துள்ளமைக்கும் நன்றியையும் தெரிவித்துள்ளோம். எனவே இந்த அறிக்கையில் உண்மை நிலவரங்கள் உள்ளபடி குறிப்பிடப்பட்டுள்ளது என்பதையும் நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையின் மீது 27.03.2015, 30.03.2015, மற்றும் 31.03.2015 ஆகிய நாட்களிலும் பல்வேறு ஆக்கப்பூர்வமான கருத்துகளையும், குறைபாடுகள் என்று தாங்கள் கருதுவதையும் சுட்டிக்காட்டி மாமன்ற மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் கருத்து தெரிவித்துள்ளனர். அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று, இந்த அறிக்கையைப்பற்றி அரசியல் கட்சித் தலைவர்களும், பத்திரிக்கைகள், மற்றும் தொழில்

நிறுவனங்களின் கூட்டமைப்புகளும் தங்களது கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். பெருவாரியான தொழில் கூட்டமைப்புகள் மற்றும் தொழில் துறையை சார்ந்தவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று, ஒரு முழுமையான வளர்ச்சிக்கு உதவும் அறிக்கை எனக் கருத்து தெரிவித்துள்ளதோடு, தொழில் வளர்ச்சியை ஊக்கப்படுத்தும் வகையில் உள்ளது என்றும் தெரிவித்துள்ளனர். இதே போன்று, பத்திரிக்கைகள் தங்களின் பாரபட்சமற்ற விமர்சனத்தையும் முன்வைத்துள்ளன. அரசியல் தலைவர்கள் சிலர் அவரவர்களின் மனநிலைக்கு ஏற்றவாறு, wishful thinking என்று ஆங்கிலத்தில் சொல்வார்களே, அதாவது தங்களின் கற்பனை விருப்பத்திற்கேற்ப நடந்துவிட்டதாகக் கருதுவார்களே, அதுபோல, அரசியல் ரீதியாகவும் பொதுப்படையாகவும் தங்களின் எண்ணப்படி கருத்துகளை முன்வைத்துள்ளனர். இவர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு பாலகிருஷ்ணன் அவர்கள் பேசும்பொழுது, ஒரு சில துறைகளில் சென்ற ஆண்டின் நிதி ஒதுக்கீட்டைக் காட்டிலும் ஒதுக்கீடு குறைந்து விட்டதாக குற்றம் சாட்டினார். முதலாவதாக, காவல் துறைக்கான ஒதுக்கீடு இந்த ஆண்டு 5,716.81 கோடி ரூபாயாக உள்ளதைவிட, வரும் நிதி ஆண்டிற்கு 5,568.81 கோடி ரூபாயாகக் குறைந்துள்ளது என்றும் திரு பாலகிருஷ்ணன் அவர்கள் குறிப்பிட்டார். இதுகுறித்து கூட, நான் உடனடியாக விளக்கமளித்தேன். 2014-15 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில், 5,186.20 கோடி ரூபாய் என்றும், 2015-16 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு 5,568.81 கோடி ரூபாய் என்றும், அதனால் இது அதிகம் தான் என்றும் குறிப்பிட்டேன். ஆனால் திரு பாலகிருஷ்ணன் அவர்கள் திரும்பத் திரும்ப திருத்திய ஒதுக்கீட்டை இங்கே ஒப்பிட்டுப் பேசினார். இது குறித்த விரிவான விளக்கத்தை நான் தருவதற்கு விரும்புகிறேன். ஒவ்வொரு துறைக்கும் நிதிநிலை அறிக்கை சமர்ப்பித்து ஒதுக்கீடு செய்த பிறகு, ஒருமுறை ஒதுக்கீடாக, சில திட்டங்களுக்கும்

செலவினங்களுக்கும், அல்லது ஏற்கனவே நிலுவையில் உள்ள தொகையை வழங்குவதற்கு ஒருமுறை ஒதுக்கீடாகவும், நிதி ஒதுக்கீடு செய்ய நேரிடும். சில சமயம் ஒரு ஆண்டில், அந்த ஆண்டில் மட்டும் மேற்கொள்ளப்பட உள்ள கட்டடப் பணிகள் இருக்கலாம். அத்தகைய இனங்களில் திருத்திய ஒதுக்கீட்டில் கூடுதல் நிதி ஒதுக்கம் நேர்ந்தாலும், அடுத்த ஆண்டிற்கு அத்தகைய நிதி ஒதுக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதால், அந்த அளவிற்கு நிதி ஒதுக்கீடு குறைய வாய்ப்புள்ளது. அதேபோல் சில திட்டங்கள் அந்த ஆண்டு முடிவுக்கு வருமேயானால் அடுத்த ஆண்டிலே நிதி ஒதுக்கம் குறையவும் வாய்ப்பு உள்ளது. எனவே எல்லா மானிய கோரிக்கைகளிலும் ஆண்டுக்கு ஆண்டு கூடுதலாகவே நிதி ஒதுக்கம் செய்ய வேண்டும் என்பது நடைமுறையில் சாத்தியம் இல்லை. எனினும் அவசியமான திட்டங்களில் எந்த நிதியையும் குறைக்காமல் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். இந்த நிதிநிலை அறிக்கையிலும் அவ்வாறே செய்யப்பட்டுள்ளது. காவல் துறையைப் பொறுத்தவரை, 2014-2015 ஆம் ஆண்டில் மேலக்கோட்டையூரில் 176.70 கோடி ரூபாயில் காவல் துறையினருக்கு வீட்டுக் கடன் வழங்க ஒருமுறை நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதேபோல 88.49 கோடி ரூபாயில் மத்திய அரசு நிதி மூலம் 2014-2015 ஆம் ஆண்டில் செயல்படுத்தி வந்த காவல் துறை நவீனமயமாக்கும் திட்டம், மத்திய அரசால் 2015-2016 ஆம் ஆண்டில் கைவிடப்பட்டுள்ளது. பதின்மூன்றாவது நிதிக்குழுவின் மூலம் 64.22 கோடி ரூபாயில் செயல்படுத்திவந்த திட்ட நிதி 2014-2015 ஆம் ஆண்டோடு முடிவு பெறுகிறது. ஆகவே மொத்தமாக 329.41 கோடி ரூபாய்க்கு மேல் இத்திட்டங்களால் நிதி குறைந்துள்ளது. ஆனால் இத்துறையில் பொதுவாக மேற்கொள்ளப்படும் அனைத்து செயல்பாடுகளுக்குமான நிதி கூட்டப்பட்டுள்ளது. எனவே இதில் நிதிக் குறைபாடு என்பது இல்லை.

சமூகநலத்துறையைப் பற்றியும் இங்கே குறிப்பிட்டார்கள். இத்துறையில் 2014-2015 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்படி

ஒதுக்கப்பட்ட நிதி 3,854.64 கோடி ரூபாய் ஆகும். 2015-2016 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதி 4,081 கோடி ரூபாய். இது சென்ற ஆண்டைவிட கூடுதலான நிதி ஒதுக்கீடுதான். திருத்திய ஒதுக்கீட்டில் இத்துறைக்கு 4,138.38 கோடி ரூபாய் கூடுதலாக ஒதுக்கப்பட்டதற்குக் காரணம் மதிய உணவுத் திட்டத்தில் அங்கன்வாடி கட்டடங்களை கட்டுவதற்கும், மேம்படுத்துவதற்கும் ஒருமுறை ஒதுக்கீடாக 170.09 கோடி ரூபாய் கூடுதலாக ஒதுக்கப்பட்டது. இது ஒரு சிறப்பு ஒதுக்கீடாகும். அதே அளவு நிதி, வரும் ஆண்டிலும் ஒதுக்கவேண்டிய அவசியம் இல்லை. அதனால் இந்தத் துறைக்கும் போதுமான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்துறையில் எந்தத் திட்டத்திற்கும் நிதி குறைக்கப்படவில்லை.

இதேபோல போக்குவரத்துத் துறையைப் பற்றியும் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டார். போக்குவரத்துத் துறையில் 2014-2015 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் படியான ஒதுக்கீடு 1,107.97 கோடி ரூபாய். 2015-2016 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு 1,540.13 கோடி ரூபாய். இது சென்ற ஆண்டைக் காட்டிலும் கணிசமான கூடுதல் ஒதுக்கீடு என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் திருத்திய ஒதுக்கீட்டில் 1,800.84 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த கூடுதல் ஒதுக்கீடான சுமார் 300 கோடி ரூபாய், ஏற்கனவே ஒதுக்கப்பட்ட நிதியை விட கூடுதலாக டீசல் மானியத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை ஆகும். தற்போது டீசல் விலை குறைந்துள்ள நிலையில் அதே அளவிற்கான ஒதுக்கீடு இத்துறைக்குத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதனால் இந்தத் துறைக்கும் போதுமான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இளைஞர் நலத்துறையைப் பொருத்தவரை 2014-2015 க்கான ஒதுக்கீடு 146.64 கோடி ரூபாய் ஆகும். அந்த ஆண்டின் திருத்திய மதிப்பீடு 199.35 கோடி ரூபாய். இதில் கூடுதலாக 27.42 கோடி ரூபாய் ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கத்தில் சில கட்டடப் பணிகளுக்காக ஒருமுறை ஒதுக்கீடாக சிறப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டது. இது தொடர்ந்து

தேவைப்படாத நிலையில் 2015-2016ம் ஆண்டிற்குத் தேவையான ஒதுக்கீடான 145.70 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதேபோல், கைத்தறி மற்றும் துணி நூல் துறைக்கு 2014-2015 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த கைத்தறி மேம்பாடு திட்டத்திற்காக 44.09 கோடி ரூபாயும், தொழிலாளர் பென்ஷன் திட்ட பாக்கித் தொகைகளை வழங்க கூட்டுறவு நூற்பாலைகளுக்கு 63 கோடி ரூபாயும், ஒருமுறை ஒதுக்கீடாக, 2014-2015ல் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இது 2015-2016 ஆம் ஆண்டு தேவையில்லை என்பதால், 1,100.57 கோடி ரூபாய் மட்டும் இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் இந்தத் தொகை கூட இத்துறைக்கு சென்ற நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட 1,032.43 கோடி ரூபாயை விட கூடுதல் என்பது குறிப்பிடத் தக்கது.

கூட்டுறவு துறைக்கும் அதேபோல் பொதுவிநியோகத் திட்டத்தைச் செயல்படுத்தும் கூட்டுறவு அமைப்புகளுக்கு கூடுதலாக 60 கோடி ரூபாய் 2014-15ல் ஒதுக்கீடு செய்யப்பட்டது. எனவே 2014-2015 ஆம் ஆண்டு ஒதுக்கீடு 658.02 கோடி ரூபாயாக இருந்தாலும் திருத்திய ஒதுக்கீட்டில் 723.55 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ள நிலையில் 2015-2016க்கு 670.06 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதேபோல் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறையில் நிலுவையாக இருந்த விளம்பர செலவுகளை சரி செய்ய திருத்திய ஒதுக்கீட்டில் கூடுதல் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை, 2015-2016 ஆம் ஆண்டிற்கு தேவை இல்லை என்பதால் அத்துறைக்குத் தேவையான அளவில் மட்டும் அதாவது 66.78 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

எனவே சில துறைகளில் மேற்கண்ட விவரங்களின்படி திருத்த ஒதுக்கீட்டிற்குக் குறைவான ஒதுக்கீடு இருந்தாலும், 2014-2015 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட ஒதுக்கீட்டைக் காட்டிலும் கணிசமாகவே

உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது என்பதையும், பல துறைகளில் திருத்திய ஒதுக்கீட்டைக் காட்டிலும் கூட, தேவைக்கு ஏற்ப கூடுதல் நிதி வழங்கப்பட்டுள்ளது என்பதையும் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். இவை அந்தந்த துறைகளின் தேவையின் அடிப்படையில் ஒதுக்கப்பட்டுள்ளது எனவும், எந்தத் திட்டங்களுக்கும் நிதி குறைக்கப்படவில்லை என்பதையும் நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். உதாரணமாக, விவசாயத் துறைக்கு 2014-2015 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் ஒதுக்கீடு 5,360.30 கோடி ரூபாய். திருத்திய ஒதுக்கீடு 5.968.34 கோடி ரூபாய். 2015-2016 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு 6,613.68 கோடி ரூபாய். இப்படி பல உதாரணங்களைச் சொல்லலாம். எனினும், ஒரு உறுதியை மட்டும் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். எந்தத் திட்டங்களுக்கும் நிதி குறைக்கப்படவில்லை. அவசியமாக தேவைப்படும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. வருங்காலத்தில் கூடுதல் நிதி தேவை ஏற்படுமேயானால் அவற்றிற்கும், மாண்புமிகு அம்மா அவர்களது அரசு தவறாமல் சேர்த்து நிதி ஒதுக்கும் என்பதை இம்மாமன்றத்திற்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த 2011 மே மாதம் மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபோது, இந்த மாநிலத்தின் நிர்வாகம் எவ்வாறு இருந்தது என்பதை பற்றி 2015-2016 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் நிர்வாகம் சீர்குலைந்து இருந்தது என்று தெரிவித்தேன். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களும் பலமுறை இதையேதான் இம்மாமன்றத்திலே தெரிவித்துள்ளார்கள். கடந்த தி.மு.க. ஆட்சி முடிவுற்ற 2010-11 ஆம் ஆண்டில் மாநிலத்தின் நிர்வாகம் சரியாக இல்லை என்பதும், நிதிநிலையும் சீராக இல்லை என்பதும் அனைவருக்கும் தெரியும். நிதிப் பற்றாக்குறை, மாநில உற்பத்தி மதிப்பில் மூன்று சதவீதத்திற்குள் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்று இருந்தாலும், அந்த ஆண்டில் நிதிப் பற்றாக்குறை, மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் 3.04 சதவீதமாக இருந்தது. மாநிலத்தின் நிர்வாகம் சீர்குலைந்தும், சட்டம் ஒழுங்கு சீர்கெட்டும்

இருந்ததை நாடே அறியும். ஆகவே இந்த நிதிநிலை அறிக்கையில் நான் தெரிவித்த கருத்து பொதுவாக, மாநில நிர்வாகம் அப்போது எப்படி இருந்தது என்பதைத்தான். இதை மனதில் வைத்து இந்த அரசைப் பற்றி ஏதாவது குறை சொல்ல வேண்டும் என்பதற்காகவே, மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள், தலைமை நிதிக் கணக்காயரின் அறிக்கையை வைத்துக்கொண்டு இம்மாமன்றத்தில் சில கருத்துக்களை கூறினார். தூங்குபவர்களை எழுப்பலாம், தூங்குவதுபோல் நடிப்பவர்களை எப்படி எழுப்புவது ?. சட்டப்பேரவையின் நாற்பது ஆண்டு கால அனுபவம் உள்ளவர் அவர். ஒரு மாநில அரசின் நிதிநிலை பராமரிக்கப்படும் செயல்முறைகள் அனைத்தையும் மிகவும் நன்கு அறிந்தவர். ஆண்டுதோறும் தலைமை நிதிக் கணக்காயரின் ஆய்வு அறிக்கை இப்பேரவையில் சமர்ப்பிக்கப்படுவதையும் நன்கு அறிந்தவர். எந்த அரசாக இருந்தாலும் அதில் அந்த காலகட்டத்தில் ஏற்படுகின்ற சில குறித்துரைகள், குறைபாடுகள், தவறுகள் போன்றவற்றை அந்த அறிக்கையிலே குறிப்பிட்டுள்ள விவரங்கள் அடிப்படையில் சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய பொது கணக்குக் குழு, துறைகள் தோறும் விரிவாக ஆய்வு செய்து அந்த கருத்துகளைப் பற்றி தொடர்ந்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதையும் நன்கு அறிவார். இதுபோல் சில இனங்களில் ஆண்டுதோறும் செய்த ஒதுக்கீடு திரும்ப ஒப்புவிப்பு செய்யப்படுவதும், அது மறுநிதி ஒதுக்கத்தின் மூலம் அந்தந்த மானியங்களின் ஒதுக்கீடுகளுக்குள் பயன்படுத்தப்படுவதையும் நன்கு அறிந்தவர். இதையெல்லாம் அறிந்தும் ஒதுக்கீடு செய்யப்பட்ட சில இனங்களில் அதற்கான நிதி திரும்ப ஒப்புவிக்கப்பட்டதை ஏதோ ஒரு பெரும் குற்றமாக இங்கே பெரிதுபடுத்தி பேசினார். நிதிநிலை அறிக்கையைத் தயாரிக்கும்பொழுது ஒவ்வொரு துறைக்கும், ஒவ்வொரு திட்டத்திற்கும், ஒவ்வொரு பணிக்கும் தேவையான நிதியை அந்தந்த துறைகளுடன் விவாதித்து அவர்கள் அளிக்கும் தேவையின் அடிப்படையில் நிதி ஒதுக்கப்படுகிறது. அதன்பிறகு துணை மதிப்பீடுகளின் மூலமாக புதிதாக அறிவிப்பு செய்யப்பட்ட திட்டங்களுக்கும், தேவைப்படும் கூடுதல் நிதி

போன்றவற்றிற்கும் கூடுதல் நிதி ஆதாரங்களைக் காட்டி ஒதுக்கீடு செய்யப்படும். இறுதித் துணை மானியக் கோரிக்கை மார்ச் மாதம் சமர்ப்பிக்கப்படும்பொழுது கூட, அந்தந்த துறைகள் சில இனங்களில் குறிப்பிட்ட தொகை தேவை என தெரிவித்தால், அந்த ஒதுக்கீடு தரப்படும். ஆண்டு இறுதியில் வருவாய் செலவினங்களாகட்டும் அல்லது மூலதனச் செலவினங்களாகட்டும் சிலசமயங்களில் அவ்வாறு பெறப்பட்ட தொகையிலும் எதிர்பாராதபடி சில இனங்களில் செலவை மேற்கொள்ள முடியாமல் போகலாம். அவ்வாறு செலவினங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை மறுஒப்புவிப்பு செய்தால், அதை துணை மானிய கோரிக்கையிலும் மானியங்களுக்குள் ஏற்படும் சேமிப்பிலிருந்து மறு நிதியொதுக்கம் செய்வதை எதிர்நோக்கி அனுமதிக்கப்பட்ட பல திட்டங்களுக்கு அடையாள ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ள நிலையில், அந்தந்த மானிய கோரிக்கைகளுக்குள்ளாகவே மறு நிதி ஒதுக்கம் செய்து பயன்படுத்தப்படும். இதையும் மீறி சில இனங்களில் கூடுதல் செலவினங்களும், ஒதுக்கீட்டிற்குக் குறைவான செலவினங்களும் ஏற்படுமேயானால் அதுகுறித்து பொதுக் கணக்குக் குழு ஆய்வு செய்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும். இந்த நடைமுறை, நிதி மேலாண்மையைப் பொறுத்தவரை காலம் காலமாக நடந்துவரும் நடைமுறை. எந்த ஒரு அரசும் துல்லியமாக செலவுகளைக் கணக்கிட்டு ஒதுக்கீடு செய்து, சேமிப்பே ஏற்படாமல் முழுமையாக செலவு செய்துவிட முடியாது. எல்லா அரசு நிதி நிர்வாகத்திலும் இவ்வாறு சில இனங்களில் நிதி திரும்ப ஒப்புவிப்பு செய்வது தவிர்க்க முடியாத ஒன்று. இதில் நிதி ஒதுக்கம் திரும்பப் பெறுவதால் நிர்வாகமே சீர்குலைந்துவிட்டது என்று சொல்லிவிட முடியாது. ஏனெனில் இந்த நிதி அதே திட்டங்களுக்கு அடுத்த ஆண்டிலே செலவிடப்படும் அல்லது மறு நிதி ஒதுக்கம் செய்யப்பட்டால், அந்தத் திட்டங்களுக்கு அடுத்த ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்படும் நிதியிலிருந்து செலவு மேற்கொள்ளப்படும். இதில் எந்த நிர்வாக தவறுகளும் நடைபெறுவதற்கு வாய்ப்பு இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு துரைமுருகன் அவர்கள் 2012-ஆம் ஆண்டு தலைமை நிதிக் கணக்காயரின் அறிக்கையில் 248 தலைப்புகளில் 11,571.34 கோடி ரூபாய் சரண்டர் செய்யப்பட்டதாகவும், அதில் 74 தலைப்புகளில் 4,359.78 கோடி ரூபாய் முழுமையாக திரும்ப ஒப்புவிப்பு செய்யப்பட்டுள்ளதாகவும் இங்கே குறிப்பிட்டுப் பேசினார். இதில் வருவாய் கணக்குகளும் மூலதன கணக்குகளும் இருக்கின்றன என்பது உண்மைதான். ஆனால் ஒப்புவிப்பு என்பது வருவாய் கணக்கிலும் வரலாம். மூலதனக் கணக்கிலும் வரலாம். மூலதனக் கணக்கில் தான் வரவேண்டும் என்பதல்ல. அத்தகைய ஒப்புவிப்பு தவிர்க்கமுடியாத ஒன்று என்ற விளக்கத்தையும் அதில் உள்ள நடைமுறைகளையும் ஏற்கனவே விளக்கினேன். அதனால்தான் இதே போல் 2006-2007ம் ஆண்டில் தி.மு.க. ஆட்சி காலத்தில் 166 தலைப்புகளில் 5401.32 கோடி ரூபாய் செலவிடப்படாமல் திரும்ப ஒப்புவிப்பு செய்யப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டுள்ளேன். அந்த ஆண்டு தலைமை நிதிக் கணக்காயரின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதே போல் 2007-2008ல் 202 இனங்களில் 4,766.83 கோடி ரூபாயும், 2008-2009ல் 174 இனங்களில் 5,708.31 கோடி ரூபாயும், 2009-2010ல் 184 இனங்களில் 6,767.93 கோடி ரூபாயும், தி.மு.க. ஆட்சியில் செலவிடப்படாமல் திரும்ப ஒப்புவிப்பு செய்யப்பட்டுள்ளன என்பதும் அந்தந்த ஆண்டு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. 2010-2011 ஆம் ஆண்டிலும் 190 இனங்களில் 4,505.91 கோடி ரூபாய் திரும்ப ஒப்புவிப்பு செய்யப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். 100 சதவீதம் திரும்ப ஒப்புவிப்பு செய்யப்பட்ட தலைப்புகள் பற்றியும் அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன என்பதை குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன்.

தி.மு.க. ஆட்சியின் மறு ஒப்புவிப்பு செய்த இனங்களில் கூட கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை, ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலன், விவசாயம், மக்கள் நல்வாழ்வு, நகர்ப்புற நிர்வாகம்

மற்றும் குடிநீர் வழங்கல், மீனளம் போன்ற துறைகளும் உள்ளன என்பதையும் அவற்றிலும் வருவாய் கணக்கிலும் மூலதன கணக்கிலும் ஒதுக்கப்பட்ட நிதி ஒப்புவிப்பு செய்யப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, ஆண்டுதோறும் இவ்வாறு சில இனங்களில் ஒதுக்கப்படும் நிதி திரும்ப ஒப்புவிப்பு செய்யப்படுவதும் அவை மறு நிதி ஒதுக்கீட்டின் மூலமாக அதே ஆண்டில் அனுமதிக்கப்பட்ட திட்டங்களுக்கு அந்தந்த மானியங்களுக்குள் பயன்படுத்தப்படுவதும், நிதி திரும்ப ஒப்புவிக்கப்பட்ட திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்படுமேயானால் அவற்றிற்கு அடுத்த ஆண்டு நிதி ஒதுக்கீட்டிலிருந்து நிதி பயன் படுத்தப்படுவதும் எல்லா அரசும் பின்பற்றும் பொதுவான நடைமுறையே அன்றி வேறொன்றுமில்லை.

ஏதோ, தலைமை நிதிக் கணக்காயரின் அறிக்கையில் இவர் புதிதாக கண்டுபிடித்துவிட்டதைப் போன்று இந்த மாமன்றத்தில் ஒரு பிரமையை ஏற்படுத்தி, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசின் மீது தவறான ஒரு களங்கத்தை ஏற்படுத்த மாண்புமிகு உறுப்பினர் திரு துரைமுருகன் வேண்டுமென்றே முயற்சி செய்துள்ளார் என்றே கருதுகிறேன். அவரது கட்சித்தலைமைக்கு தனது விசுவாசத்தை இப்படி காண்பிக்க முற்பட்டுள்ளார் என்றே நான் எண்ணுகிறேன். நிதிநிலை அறிக்கையை அவர் படிக்கவே இல்லை என்றுதான் நான் நினைக்கிறேன். எனவேதான் நிதிநிலை அறிக்கை பற்றி வேறு எந்தக் கருத்தையும், பாவம், அவரால் தெரிவிக்க இயலவில்லை.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**